தென் இந்திய சமய சரித்திர
கலாச்சார சுற்றுலா
சித்திரை நடுப்பகுதியில்
° திருச்சி ° அழகர் கோவில்
° மதுரை ° சுசீந்திரம்
° பாஞ்சாலங்குறிச்சி ° சிதம்பரம்
° எட்டயபுரம் ° குற்றாலம்
° ஆறுபடை வீடு ° நாகூர்
° வைற்பீல்ட் ° திருவண்ணாமலை
° திருக்கழுக்குன்றம்
° கன்னியாகுமரி ° தஞ்சாவூர்
° சீர்காழி ° வேளாங்கன்னி
° மைசூர் ° சென்னை ° பெங்களூர்
° காஞ்சிபுரம் ° கொடைக்கானல்
இன்னும் பல
விபரம்: சத்தியா றவல்ஸ்



★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No· QB/8945/78

மலர்: 21 பங்குனி 24 ஜ—அல் 9 இதழ்: 55
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 7-4-79



தென் இந்திய சமய சரித்திர
கலாச்சார சுற்றுலா சித்திரை 79
கட்டணங்கள்
ரூபா 960/- (இலங்கையிலிருந்து இந்தியா சென்று திரும்பும் பிரயாணச் செலவு.) சாப்பாட்டுச்செலவு பங்கு பற்றுவோரைச் சார்ந்தது. பிரத்தியேக பஸ் மூலம் தமிழகத்தில் சுற்றுலா சொற்ப ஆசனங்கள் மட்டுமேயுண்டு.
சத்தியா றவல்ஸ்
(அரசு பதிவு பெற்றது)
இலங்கை உல்லாசச்சபை அங்கீகாரம், அன்நிய செலாவணி ஏற்றுக்கொள்ள அங்கீகரிக்கப்பெற்றது.
224/A, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம் - போன்: 7677


# எந்த ஒரு அரசியல் நோக்கத்திற்காகவும் இந்த நாட்டை இரண்டாகப் பிரிக்கமுடியாது

## ஜனாதிபதி ஜே. ஆர் அறிவிப்பு

## "உலக அரங்கில் எமது இலட்சியக் குரல் ஒலிக்கிறது"

### யாழ். நகரில் அளித்த வரவேற்பில் அமிர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் நானும் தந்தை செல்வாவும் தமிழகம் சென்றபோது இந்தியத் தலைவர்களை வீடு வீடாகத் தேடிச் சென்றே எமது அவல நிலையை அவர்களுக்கு விளக்கினோம். இன்று அப்படியில்லை. எமது நிலையை நன்கு புரிந்துகொள்வதற்கு இந்தியத்தலைவர்களே நான் முந்தி நீ முந்தி யென போட்டி போட்டு எங்களைச் சந்தித்து நிலைமையை அறிந்துகொண்டனர். இப்போது அங்கு நிலைமை திருந்திவிட்டது. உலக அரங்கில் எமது இலட்

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ். ரயில்நிலையத்தில் அமிர்தலிங்கத்திற்கு குதூகலமான வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தமிழர் நிலையை இந்தியாவில் எடுத்து விளக்கிய பின், நாடு திரும்பிய எதிர்க் கட்சித்தலைவரும், தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகருமான திரு. ஏ அமிர்தலிங்கத்திற்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் நேற்றுக் காலை குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது.

மெயில்ரயில் காலை 9-20 மணிக்கு, யாழ். ரயில் நிலையத்தைவந்தடைந்ததும், ஆதரவாளர்கள் மலர்மாலைகளுடன் திரு. அமிர்தலிங்கம் வந்த ரயில்பெட்டியை நோக்கி, மேடையில் நின்ற பிரயாணிகளுக்கு ஊடாக ஓடிச்சென்றனர். ரயில் நிற்பதற்குமுன்னரே மாலைகளுடன் வாசலில் ஒருவரை யொருவர் போட்டி போட்டுக்கொண்டு வரவேற்பதற்கு காத்திருந்தனர்.

திரு. அமிர்தலிங்கம் புன்சிரிப்புடன், ரயிலைவிட்டுஇறங்கியதும், ஒருவர்பின் ஒருவராக மாலைசூட்டி வரவேற்றனர். அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் திரு. செ மெற்றுள்பயில் மலர் மாலை அணிவித்து வரவேற்றார் ஒருவர் பட்டுச்சால்வை ஒன்றை திரு. அமிர்தலிங்கம் கழுத்தில் சூட்டினார். திரு. அமிர்தலிங்கத்துடன் ஊர்காவற்றுறை எம். பி.பண்டிதர் கா பொ. இரத்தினமும் வந்திருந்தார்.

[6ம் பக்கம் பார்க்க]

## 302 ஆசிரியர்களுக்கும் மீண்டும் வேலை

(யாழ்ப்பாணம்)

கடந்த பெப்ரவரி மாதம் மாணவர் பகிஷ்கரிப்பையடுத்து வேலை நீக்கம் செய்யப்பட்ட 150 ஆசிரியர்களுக்கும் மீண்டும் வேலை வழங்கப்படவுள்ளது.

கடந்த இரண்டு மாத காலமாக அவர்கள் சம்பளமில்லாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி 'ஈழநாடு' நிருபர் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. மாணிக்கவாசகருடன் தொடர்பு கொண்டபோது அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்

அவர் மேலும் கூறியதாவது:

வேலைநீக்கம் செய்யப்பட்ட 307 ஆசிரியர்களில் 155 பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளதாகவும், மிகுதிப்பேரது விஷயமாக தாம் மேலதிக கல்வி மா அதிபருடன் தொடர்பு கொண்டபோது அவர்களுக்கும் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் அடுத்த வாரத்தில் கடிதங்கள் அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டதாகவும் கல்வி அதிபதி கூறினார். [கு]

# வகுப்புவாதத்தை தூண்டும் சக்திகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை ஒரு சிறிய நாடு. இந்த நாட்டை எந்த ஒரு அரசியல் நோக்கத்திற்காகவும் இரண்டாகப் பிரிக்க முடியாதென்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினார்.

வடமாகாண எம். பிக்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கத் தவறியமையால் வட பகுதியின் அபிவிருத்திப் பொறுப்புக்களை மட்டக்களப்பு எம் பியும் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினருமான திரு. செல்லையா இராசதுரையிடம் ஒப்படைத்திருக்கிறேன் என்றும் திரு. ஜெயவர்த்தன கூறினார்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 12 எம் பிக்களில் 10 பேர் அரசுக்கு ஆதரவளித்து வருகின்றனர் எனவே அவர்களின் ஒத்துழைப்புடன் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு முதலிடம் வழங்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே திரு, ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நாட்டில் வகுப்புவாதத்தைத் தூண்டிவிடும் எவர்மீதும் இன, மத, பேதமின்றி, உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. ஜெயவர்த்தன கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

இன்றைய அரசு பதவிக்கு வந்தபின்னர் அப்போது அமுலிலிருந்த இன அடிப்படையிலான தரப்படுத்தல்முறையை நீக்கி திறமை அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது இருந்தபோதிலும் இப்போது விகிதாசார அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி முறையை அமுல் செய்ய வேண்டியுள்ளது. எனவே தான் இம்முறை திறமை அடிப்படையில் அகில இலங்கை ரீதியில் 30 வீதமும் மாவட்ட அடிப்படையில் 55 வீதமும் பின் தங்கிய பகுதிகளுக்கு 15 வீதமுமாக பல்கலைக்கழகங்களில் அனுமதி வழங்கப்பட்டது இதன் மூலமே இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அதிகமாணவர்கள் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றனர். [இ]

## 'இராசு'வின் செயலாளர் விக்கிரமவீரசூரியா

(கொழும்பு)

திரு. செல்லையா இராசதுரைக்கு புதிதாக வழங்கப்பட்டுள்ள பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கலாநிதி விக்கிரமவீரசூரியா நியமிக்கப்பட்டுள்ளார்.

திட்ட அமுலாக்க அமைச்சின் செயலாளராக தற்போது கடமையாற்றிவரும் கலாநிதி விக்கிரமவீரசூரியா தொடர்ந்து இரு பதவிகளையும் வகித்து வருவார். [ம-இ]

## இந்து மாமன்றக் கட்டடத் தாக்குதல்

## ஆறு இளைஞர்களும் பிணையில் விடுதலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு இந்து மாமன்ற கட்டிட தாக்குதல் சம்பந்தமாக பொலிசாரால் சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆறு இளைஞர்களும் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி தாக்குதல்தொடர்பாக தமிழ் இளைஞர் பேரவையின் மட்டக்களப்பு செயலாளர் மா. குணாளன் உட்பட

[5ம் பக்கம் பார்க்க]

## காணி அறுதி மோசடி: இருவர் கைது!

[யாழ்ப்பாணம்]

வீட்டுக் காணியொன்றை மோசடி செய்ததாகக் கூறப்படும் இருவரை பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைது செய்து யாழ் நீதிமன்றத்தில் ஆஜர்செய்தபோது பதில் நீதிபதி திரு க கலகரத்தினம் சந்தேகநபர்களை தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்

சந்தேகநபர்களான கொக்குவில்கிழக்கு சமாதானநீதவான் டாக்டர் அப்பாக்குட்டி அம்பலவாணர் திருநெல்வேலியைச் சேர்ந்த நாகமுத்து இராசையா ஆகிய இருவரும் கந்தர் மடத்தைச் சேர்ந்த தம்பாபிள்ளை இராசையா என்பவருக்கு சொந்தமான செம்மணியிலுள்ள வீட்டு காணியை மோசடி செய்ததாக புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் சந்தேகநபர்களை கைதுசெய்தனர்

சந்தேகநபரான நாகமுத்து இராசையா என்பவர், தம்பாபிள்ளை இராசையா என்று உறுதியில் கையெழுத்திட்டு, அவ்வீட்டுக் காணியை அம்பலவாணருக்கு வழங்கியதாகவும் 1969 ஜூன் 22ல் உறுதி எழுதப்பட்டதாகவும், விசாரணையில் தெரியவந்துள்ளது.

குடும்பத்தகராறு காரணமாக காணிச் சொந்தக்காரரான தம்பாப்பிள்ளை இராசையா சிறிது காலம் சந்தேகநபரான எஸ் ஏ. அம்பலவாணர் வீட்டில் வசித்துவந்த

[5ம் பக்கம் பார்க்க]

# இன்றைய பலன்

பங்குனிமாதம் 24-ம் திகதி

சனிக்கிழமை

(7-4-1979)

**மேடம்:** இதமான வாழ்வு, இன்சொல் இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும், செய்தொழிலாலும் சிறப்புண்டு, மேலதிகாரிகளும் உதவிக்கு முன்வருவார்கள்.

**இடபம்:** இலட்சியப் பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும், எதிர்பார்த்த பொருள் வரவும் இன்று கிடைக்கலாம், பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். தரமான நாள்.

**மிதுனம்:** துன்பத்தின் ரேகைகள் படரும், எதிலும் தயக்கம் ஏற்படும், ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக் கூடும். கடன் தொல்லை அதிகரிக்கலாம், நிதானம் வேண்டும்.

**கடகம்:** மனப் போராட்டம் அதிகரிக்கும், உறவினர் ஒருவர்மீது ஆத்திரம் பிறக்கலாம், இதன்மூலம் கைகலப்பும் ஏற்படலாம், பிள்ளையொன்றின் உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

**சிங்கம்:** குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும், வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்று கிடைக்கலாம், பணவரவிற்கும் இடமுண்டு. உடல் நலத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமுண்டு

**கன்னி:** அன்னியரின் சகவாசம் சங்கடத்தில் மாட்டி வைக்கும். அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் நிகழலாம். எதிரிகளின் சூழ்ச்சிகள் மனநிம்மதியைக் குறைக்கும், தொழிலிலும் தடைகள் உண்டு.

**துலாம்:** வாழ்க்கையில் சில முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும், வாகன விருத்திக்கு இடமுண்டு, நீர்ப்பாசனப் பகுதியில் கடமையாற்றுபவர்களுக்கு சிறப்பான தினம், கல்வியிலும் ஆர்வம் பிறக்கும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சிகரமான தினம், குடும்பத்தில் விருந்தினர் வருகையால் கலகலப்பு ஏற்படும், நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள். கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்.

**தனுசு:** பணம் பல வழிகளிலும் செலவாகும், அந்நிய நண்பர் ஒருவரால் ஏமாற்றமடையக் கூடும், உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவு பார்ப்பர், பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும்.

**மகரம்:** களவிரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். காதலர்கள் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் இடம்பெறும், புத்திரவழியாலும் மகிழ்ச்சியுண்டு

**கும்பம்:** தொல்லைகள் தலைதூக்கும், தொழில்புரியும் இடத்தில் ஏமாற்றத்திற்கு இடமுண்டு, வழக்கு விவகாரங்களில் காலைவாரி விடலாம் அவசர முடிவைத் தவிர்க்கவும், அடக்கம் வேண்டும்.

**மீனம்:** இருதயப் படுதாவில் இன்பத்தின் மின்னல், பிதாவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், செய்தொழிலாலும் சிறப்புண்டு, மேலதிகாரிகளும் உதவிக்கு வருவார்கள்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## வட இலங்கை சங்கீத சபை

## பரீட்சை முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. 1978ம் ஆண்டில் நடைபெற்ற இப் பரீட்சை முடிவுகள் தொடர்ந்து 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியிடப்படும்:-

o இவ்வடையாளம் சாஸ்திரப் பரீட்சையில் விசேட சித்தி.

f இவ்வடையாளம் செயல்முறைப் பரீட்சையில் விசேட சித்தி.

[நேற்றைய தொடர்ச்சி]

இரண்டாம் பகுதி

மானிப்பாய்

முதலாம் பிரிவு

**வயலின்:-**

o நிர்மலராணி முருகேசபிள்ளை, o குகநந்தினி கந்தவனம், o தர்ஷினி சோதிநாதன்.

**வீணை:**

o விமலாதேவி [illegible]

**பாட்டு:-**

o வளர்மதி நடராசா, f சுமதினி மயில்வாகனம், o விதுஷினி சோதிநாதன், f சந்திரிக்கா கணேஸ்வரன், o ரஞ்சினிதேவி சற்குணம்.

இரண்டாம்பிரிவு

**வயலின்:**

o சுமதி பாலசுப்பிரமணியம், பவானி கனகரட்ணம், o விதுஷினி சோதிநாதன், o ஞானரஞ்சிதம் நடராசா. மதிவதனி துரைராஜா (மே. பா)

## கேள்வி விளம்பரம்

### சுன்னாகம் பட்டணம்

சுன்னாகம் பட்டணத்தில் சேரி ஒழிப்புத் திட்ட வீடுகள் ஐந்து (5) அமைப்பதற்கு இருபிரதிகளைக் கொண்ட முத்திரையிடப்பட்ட கேள்விகள் 26-4-79-ந் திகதி காலை 10 மணி வரை சுன்னாகம் பட்டணசபை விசேட ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபா 45,000/-ம் அதற்கு மேற்படவும், அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி மன்றங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

கேள்விக்காரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 300/-ம் கேள்விப் படிவ விலையாக ரூபா 50/-ம், சுன்னாகம் பட்டணசபை அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டையும் பதிவுச் சான்றிதழ்களையும் 25-4-79-ந் திகதி பகல் 12-15 மணிக்கு முன்னதாகச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் 26-4-79-ந் திகதி பிற்பகல் 2-30 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் இவ்வலுவலகத்தில் வேலைகள் அத்தியட்சகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. பாலசிங்கம்,
விசேட ஆணையாளர்,
சுன்னாகம் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
சுன்னாகம் பட்டணம்,
சுன்னாகம்,
05-04-79 2091

## பயிற்சி

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், றேடியோ (Transistor), Auto Electricians Certificate Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப்பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல்வீதி, யாழ்ப்பாணம். 2066

**பாட்டு:**

o வளர்மதி சச்சிதானந்தம், மயூராஞ்சினி மயில்வாகனம், o சுமதி பாலசுப்பிரமணியம், வசந்தினி சிவானந்தன், பிரேமலதா லக்சுமிநாதன், பிறேமா நடராசா, o தயா வேலாயுதம், தேவகி இராசரத்தினம், o சசித்தா பரம்சோதி, வான்மதி சுப்பிரமணியம், சுகந்தனி இராசையா, o ஞானதேவி சின்னத்துரை, அனுஷா மகேந்திரன், சகுந்தலா சண்முகநாதன், o தயாவதி பாலகிருஷ்ணஐயர், o வரமினிகணநாதன், அனுசூயா நவரட்ணம், [A] நகுலினி கைலாசபிள்ளை.

சாதாரணசித்தி

**வீணை:**

f ஜனி ஜெநாதன், o லோஜினி சிவகுருநாதன்.

**பாட்டு:**

லியோனி மகிழ்நதி துரைசிங்கம், முருகானந்தி சிவபாதம், பவானி கனகரட்ணம், மாலினி மிருதி வேலுப்பிள்ளை, யசோதா செல்வத்துரை, பிரீத்தாசினி கதிர்காமநாதன், சிவதிரவதனி பொன்ராசா, பவாநந்தி அரிச்சந்திரன், வசந்தி சண்முகநாதன், திலகவதி சண்முகம், கலைவாணி சிவராஜலிங்கம், ராதா கிருஷ்ணதேவன், மாலினிதேவி அருளம்பலம், இரஞ்சினிதேவ நாகேந்திரன், கௌரி சிவசோதி, மரிந்தா லூயிஸ் அலோசியஸ், சுபோதினி புவனேந்திரன், கலாதேவி மயில்வாகனம், சுகந்தி துரைராஜா, சிலம்புச்செல்வி புவனேந்திரன், மைதிலி கந்தையா.

(தொடரும்)

## NOTICE OF ORDER NISI

IN THE DISTRICT COURT OF VAVUNIYA.

In the matter of the intestate estate of the late Ramanathar Rajendram of Unit 9, Pavatkulam
Deceased.

Vairavanathar Ramanathar of Unit 9, Pavatkulam.
Petitioner.

Testamentary Jurisdiction
Vs.

No. 513

Saraswathie ww/o R. Rajendram of 257, Unit No. 9, Pavatkulam.
Respondent.

It is hereby notified that the abovenamed testamentary action has been instituted in the above Court for prove of the Administration of the Estate of the abovenamed deceased and Order Nisi has been entered accordingly therein.

Any person interested is hereby required to appear before this Court on the 6th day of June 1979 at 10 O'clock in the forenoon and show cause, if any, why the Order Nisi so entered should not be made Absolute.

By order of Court
..ASALINGAM
Registrar

Dated: this 21st day of March 1979. 1952

## வரணி கிராமாட்சிமன்ற

## கேள்வி விளம்பரம்

வரணி கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளரால் பதிவு செய்யப்பட்ட சங்கங்களிடமிருந்தும், ஒப்பந்தக்காரரிடமிருந்தும் பதிவுத்தபால்மூலம் (1) மந்துவில் விரக்கட்டு வீதி. (2) மகாவித்தியாலய ஆழ்வார் மட வீதி (3) கவட்டுக்கிராய் வீதி ஆகிய வேலைகளுக்குரிய கேள்வி விண்ணப்பங்கள் 27-4-79 காலை 10-30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொருவேலைக்கும் கேள்விப் பணம் ரூபா 50/-ம் பத்திரப் பணம் ரூபா 20/-ம் 24-4-79 பகல் 12 மணிக்குமுன் இக் காரியாலயத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளவேண்டும். பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. விண்ணப்பக்காரர் கேள்விப் பத்திரம் திறக்கப்படும்போது சமுகமளிக்கலாம். இன்னும் மேலதிக விபரங்கள் வரணிக் கிராமசபைக் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம். ஐயன் கண்டிச் சுடலைமடம், கிணறு வேலைகளுக்கும் ரெண்டர் வழங்கப்படும்.

அ. ம. ம. குலநாயகம்
விசேட ஆணையாளர்
வரணிக்கிராமசபை
கிராமசபைக் காரியாலயம்
வரணி
3-4-79 2084

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் புதியவீடு விற்பனவுக்கு உண்டு. வே. நடராசா, சட்டத்தரணி, நெடுங்குளம்வீதி, யாழ்ப்பாணம். 2067

2 இரும்பு அச்சுகள் 6½ அடி 4x4'' விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்;- P. இநிநடராஜ், சி வி. பாட், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 2065

யாழ்ப்பாணம்-கைதடி நுணாவிலில் "நாவலடிப்புலம்" சுமார் 15 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு எழுதவும். டாக்டர் W. R. குணரட்ன, 121, இன்னர் ப்ளவர் றோட், கொழும்பு. 2079

### தேவை

வெல்டர் (காஸ்/எலெக்றிக்கல்) லேத்மன், டீசல் மெக்கானிக் (வெய்டன் லொறிகள்) ஆகியோர் தேவைப்படுகிறார்கள். அனுபவம் வாய்ந்தோருக்கு முதலிடம் கொடுக்கப்படும். பருத்தித்துறை இன்டஸ்ட்றியல் வேக்ஸ், பருத்தித்துறை. 2080

### பயிற்சி

விசேஷ மூன்றுமாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-04-79ல் ஆரம்பமாகவுள்ளது. அதிபர் இன்ஸ்ரியூட் ஒவ்இன்ஜினியரிங் ரெக்னோலொஜி 11/B மொங்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2086


புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட

EAB ரியூப் லைற் செற் (4அடி 40w)

இங்கிலிஷ் பல்புடன்

விலை ரூபா 110/-

உங்கள் தேவைக்கு முந்துங்கள்

எம்மோ ஸன்ஸ்

மின்சார உபகரண விற்பனையாளர்கள்
79, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 404
2089


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு 14777

க. சிற்றம்பலம் ஆறுமுகம்
காரைநகர் மேற்கு,
காரைநகர்.

வழக்காளி

எதிராக

கார்த்திகேசு சிவஞானசுந்தரம் பழையகண்டி,
காரைநகர் வடக்கு,
காரைநகர்.

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் ஈடு 14777-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1979ம் ஆண்டு சித்திரை மீ 23 உ திங்கட்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 8,700ம் 1975-3-5 தொடக்கம் 1976-6-1 வரைக்கும் ரூபாய் 5,000க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 547-66செலவில் பகுதி 150ரூபா கொடுக்கப்பட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று வலந்தலை இறைபன்றித் தாழ்வு றி. பர. 16 பனைகள் வடலிகள் வாளிபயிர் செய் பயிர்களும் எல்லை கிழக்கு முருகர் சங்கரப்பிள்ளை பெண் பூரணத்துக்கும் இராமநாதர் செல்லத்துரைக்குமுரிய வாதனங்கள். வடக்கு ஒழுங்கையும் சண்முகம் கார்த்திகேசுவுக்கும் மறு பேருக்குமுரிய வாதனங்கள் மேற்கு ஆறுமுகம் சபாபதியினுரிமைக்காரரின் ஆதனம் தெற்கு சுவாமிநாதர் அருளம்பலத்துக்கும் இராமலிங்கம் சோமசுந்தரத்துக்கும் உரியவாதனங்களின் இதடங்கலும்.

எஸ். சங்கரப்பிள்ளை J. P.
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.

வேலணை,
புத்தூர்.
20-3-79 2092

# அருளாளன் எங்கள் குருநாதன்

இரவிலே வானவெளியில் எண்ணற்ற மீன்களும் கோள்களும் இலங்குகின்றன. ஒன்று சிறியது; ஒன்று பெரியது; ஒன்றின் பெயர் வியாழன்; மற்றொன்றின்பெயர்சுக்கிரன். இந்த வித்தியாசமெல்லாம் அந்தகாரத்தின் அணைப்பில் கட்டுண்டு கிடக்கும் வரையில் தான். இருட்டிலேதான் இரட்டைநிலை. கீழ்வானில் ஞாயிற்றின் ஒளிவெள்ளம் பெருகத்தொடங்கியதும், இரவில் கண்ட பேதங்களெல்லாம் மறைந்துபோய் வருகின்றன. இதுவே சிவஞானப் பேரொளி வெள்ளத்தில் திளைக்கும் பேறு பெற்ற சீவன் முத்தர்களின் உள்ள நிலை.

இத்தகைய சீவன்முத்தர்களே திருவருளின்பம் துய்க்கும் அநுபூதிமான்கள் ஆவர். தாம் துய்த்த திருவடிப் பேரின்பத்தை உலகிற்கும் வழங்க வேண்டும் என்ற தூய ஆவா இவர்களுடைய கருணையுள்ளத்தில் இடையறாது பொங்கிய வண்ணம் இருக்கும். "காகம் உறவுகலந்துண்ணக் கண்டீர், அகண்டாகார சிவபோகம் என்னும் பேரின்பவெள்ளம், பொங்கித் ததும்பிப் பூரணமாய்க்கிடக்குதையோ... புசிக்க வாரும் செகத்தீரே'' என்று தாயுமானுர் இவர்களுடைய கருணையுள்ளத்திற்குக் குரல் கொடுத்திருப்பதைக் காண்கின்ருேம். இத்தகைய ஞானச் செயல்கள் 3ம் மிடைத் தோன்றி நடமாடும் வாய்ப்பு தவத்தின் அரிய விளைவு எனக.

பரந்து கிடக்கும் சமுத்திரத்தில் நீரைப்பருகி வந்து நிலத்திடைப் பொழிந்து உயிர்களை வாழவைக்கும் மேகம்போன்று, அகண்டாகாரமாய்த் தேங்கிக் கிடக்கும் திருவருளைப் பருகி வந்து 3ம்மிடைப்பெய்து, நம்மை உய்விக்கும் கருணை மேகங்களே இந்த அநுபூதிச் செல்வர்கள். தம்மைச்சார்ந்தார்க்கெல்லாம் அவரவர் பக்குவத்திற்கேற்ப அருள் வழங்கி அல்லல் அறுத்து ஆனந்தம் நல்கும் ஆற்றல் இந்த அநுபூதிமான்களுக்கு உண்டு.

## எமது பெரும் பேறு

இந்தச்சீவன்முத்த தத்துவத்தின் பூரணவிளைவாக எங்கள் குருநாதன் யோக சுவாமிகளின் ஞானவாழ்வு அதியற்புத மலர்ச்சி பெற்று அநுபூதிமான்கள் வரிசையில் உச்சநிலை பெற்றுத்திகழ்ந்ததைக்காணும் பெரும்பேறு பெற்ருேம். அது எங்கள் தவப் பேறேயாம்.



சுவாமிகளின் ஞானவாழ்வுச் சரிதம் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாக நீண்டு நிலவியது. இந்தக்கால எல்லைக்குள் ஆயிரக்கணக்கான அன்பர்கள் இவர்களைச்சார்ந்து நின்று அளப்பரிய அற்புதமான அநுபவங்களைப் பெற்றிருக்கிருர்கள். இவர்களையே தங்கள் குருநாதனைப் பலரும் கண்கண்ட தெய்வமாக அநேகரும் பற்றி நின்று வாழ்வில் புனிதம் மலரப்பெற்றனர்.

இவர்களுடைய பாததூளி பட்டமையால் பொதுவாக ஈழநாடும், சிறப்பாக யாழ்ப்பாணமும் புண்ணிய பூமியாம் பெருமை பெற்றுள்ளன என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அநுபூதி மான்களுடைய வளர்ச்சி நிலைகளில் அபூர்வமான அதிசய ஆற்றல்களும் சித்திகளும் பல தோன்றுவது இயல்பு அப்படியானசித்திகள் பல சுவாமிகளுடைய வரலாற்றில் மலர்ந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் அன்பர்கள் அறிவார்கள்.

சித்து விளையாடல்களில் ஈடுபட்டால் அநுபூதி நிலைக்குப் பங்கம் உண்டாகும். உலக பாசங்கள் மீண்டும் கவ்விக் கொள்ளும். ஆகவே ஞானசிகரத்தையே கண்ணிற்கொண்ட எங்கள் சுவாமிகள் சித்துக்கடை விரித்து, உலகினரை மயக்கி விளையாடி வீழ்ச்சியுற எண்ணினர் இல்லையென்பது தெளிவு.

எனினும் திருவருளின் மாட்சிமையைப் புலப்படுத்துவதற்கும், தன்னைச் சரணடைந்தசில தூய அன்பர்களுடையஅல்லல் தீர்ப்பதற்கும் சுவாமிகளுடைய அருளாற்றல் விளையாடியது; விளையாட வேண்டியதும் இன்றியமையாததாயிற்று உதாரணமாக, ஒரு நிகழ்ச்சியைக் கூறவிரும்புகிறேன். அது ஒரு மிகவும் அற்புதமான நிகழ்ச்சி. சிறப்பாகச் சைவஉலகம் பெருமிதம் கொள்ளவேண்டிய நிகழ்ச்சி; சைவஉலகத்தின் ஒப்பற்ற ஞானச்செல்வங்களாகிய திருமுறைகளின் அருண்மாட்சிமையைப் புலப்படுத்திய அற்புத நிகழ்ச்சி. அது வருமாறு:

## சுவாமிகள் இல்லத்தில் நாகலிங்கப் பரதேசியார்

நாகலிங்கப் பரதேசியார் என்று ஒரு பக்தர் இருந்தார். அவர் சங்கானையைச் சேர்ந்தவர். திருமுறைபாடும் பணியையே சிவப்பணியாகக் கொண்டவர்; அவர் திருமுறைப்பித்தர்; அவர் திருவாசகம் பாடினுல் கல்லும்கனிந்து உருகும்; வாழ்நாள் முழுவதும் ஊனும் உயிரும் நைந்துஉருகப் பாடிப்பாடி, உடல் இளைப்புற்று முதுமை வந்தெய்தியது அவருக்கு.

இந்த நிலையிலே, எங்கள் யோகசுவாமிகளைப் பற்றிக் கேள்விப்பட்ட பரதேசியாருக்குச் சுவாமிகளைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது ஒருநாள் சில அன்பர்களோடு பரதேசியார் சுவாமிகளுடைய ஞானக்கொட்டிலுக்கு வந்துசேர்ந்தார்.

பரதேசியாரைக் கண்டதும், சுவாமிகள் இருக்கைவிட்டெழுந்து மகிழ்ச்சிக்கூத்தாடினுர்; தனது ஆசனத்தில் பரதேசியாரை அமருமாறு அன்புததும்பப் பணித்தார். பரதேசியார் மறுத்தார். இந்த மகான் இருந்த ஆசனத்தில் யானே இருப்பதென்று நடுங்கினுர் பரதேசியார். சுவாமிகள் இருக்குமாறு பணிப்பதும், பரதேசியார் மறுப்பதுமாகிய பணிவன்பின் ஆடல் சில நிமிடங்கள் நடந்தது. இறுதியில் சுவாமிகளின் கட்டளையை மறுக்கமுடியாமல் பரதேசியார் ஆசனத்தில் அமர்ந்தார் வந்த அன்பர்களும் தாழ இருந்தனர்.

உடனே 'இடரினும் தளரினும்' என்று தொடங்கும் சம்பந்தப்பெருமானுடையதேவாரத்தை ஓதுமாறு பரதேசியாரைப் பணித்தார் சுவாமிகள்.

## நிவேதனப் பொருட்களுடன் தம்பதிகள்

இந்தத்தேவாரத்தை ஓதிக்கொண்டிருக்கும்போது ஒரு அன்பனும் மனைவியும் சுவாமிகளுக்குப்பாத காணிக்கை சமர்ப்பிக்கும்பொருட்டு ஒரு தாம்பாளம் நிறைய நிவேதனப் பொருள்களோடு கொட்டிலை வந்து அடைந்தனர். இவர்களைக்கண்டதும், சுவாமிகள் பரதேசியாரை நோக்கிப் பின்வருமாறு கூறலுற்ருர்.

''நீர் இடரினும் தளரினும் பாடுவதைக் கேட்ட அம்மையும் அப்பனும் கயிலையில் இருந்து உமக்குப் பண்சுமந்த பாடற்பரிசு அளிக்கவந்திருக்கிருர்கள்'' என்ருர்.

வந்த அன்பரும் மனைவியும் சுவாமிகளுடைய பாதங்களில் தாம்பாளத்தைவைத்து வணங்கினர். தாம்பாளத்திலே

(5-ம் பக்கம் பார்க்க)

-- கா. சுரேந்திரன் --

## மக்கள் கருத்து

### அரசாங்க அதிபர் கவனிப்பாரா?

யாழ். குடாநாட்டில் கரையோரப் பகுதியிலுள்ளமக்கள் அதிகமாக மீன்பிடித்தொழிலையே தமது அன்ருட தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களின் தேவைகள் சில நிறைவேற்றப்பட வேண்டுமாயின் கடற்ருெழில் விரிவாக்க உத்தியோகஸ்தரின் உதவி தேவைப்படுகின்றது. சில மாதங்களுக்குமுன் யாழ். மாவட்ட கடற்ருெழில் விரிவாக்க உத்தியோகத்தராக இருந்தவர் அரசாங்கத்தினுல் இடைநிறுத்தப்பட்டதாக அறிந்தோம். அதன்பின் யாழ். மாவட்ட கடற்ருெழில் விரிவாக்க உத்தியோகத்தராக யாரையும் நியமிக்காது விட்டதனுல் யாழ்ப்பாணமாவட்டத்திலுள்ள மக்கள் மிகவும் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சென்ற வருடக் கடைசி மாதத்தில் இங்கு தற்போது நிறுத்தப்பட்டுள்ளவரை முல்லைத்தீவிற்கு மாற்றி வேருெருவர் யாழ். மாவட்டத்திற்கு மாற்றப்பட்டாராயினும் கடைசி நிமிடத்தில் அந்த மாற்றங்கள் நிறுத்தப்பட்டு அவரவர்கள் இடங்களிலேயே அவர்கள் தொடர்ந்தும் பணியாற்றினுர்கள். இதன்பின் யாழ் மாவட்ட உத்தியோகத்தர், வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டாராயினும் அதன்பின் வேறு யாரும் அவரின் இடத்திற்கு நியமிக்கப்படவில்லை. இதனுல் குறிப்பாக பாசையூர், குருநகர், பருத்தித்துறை, மயிலிட்டி, நாவாந்துறை, கொழும்புத்துறை போன்றபல பகுதிகளில் உள்ள தொழிலாளர்கள் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஒரு வெளி இணைப்பு இயந்திரம் பெறுவதாயினும் கூட டி. எவ். ஈ ஓ வின் கையொப்பமில்லாது பெறமுடியாது இந்த நிலையில் மூன்று மாதங்களுக்கு மேலாக யாழ் மாவட்டத்திற்குக் கடற்ருெழில் விரிவாக்க உத்தியோகத்தர் நியமிக்கப்படவில்லையென்ருல் இதனுல் இந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்கு அளவில்லாது போய்விட்டது

அன்ருடம் உழைத்து அன்ருட தேவைகளைக் கவனித்துவரும் மக்கள் இப்படியான ஒரு இக்கட்டான நிலையில் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து நிற்கின்றனர் இது பற்றி உதவி உத்தியோகத்தர்களிடம் கதைக்கால் அவர்கள் கையை விரிக்கின்ருர்கள். டி. எவ் ஈ ஓ இல்லாத இடத்தில் தங்களாலொன்றும் செய்யமுடியாதென்று கூறுகின்றனர் எனவேயும் அரசாங்க அதிபர் இது விஷயத்தில் உடனடிக் கவனமெடுத்து யாழ் மாவட்டக்கடற்ருெழில் விரிவாக்க உத்தியோகத்தரை நியமிப்பதற்கு வேண்டிய முயற்சி செய்வாரென நம்புகின்ருேம்.

கே. பி. வின்செனற்
பாஸையூர்.

"குடியரசு விழாவிற்குப் புறப்பட்டபோது

# எனது 'யூனிபோமை எடுத்து பேரன் புதைத்து விட்டான்

## எந்தச் சூழ்நிலையில் இளைஞர்கள் வளர்கிருர்களென்பதைச் சிந்திக்கவேண்டும்''

### பத்திரிகையாளரிடம் முகாந்திரம் இராசையா விளக்கம்

முகாந்திரம் இராசையா சென் ஜோன்ஸ் அம்புலன்சில் பணியாற்றிவந்தார் குடியரசு தினவிழாவில் கலந்துகொள்ளுமாறு அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா அழைப்பு அனுப்பியிருந்தார் அவர் அழைப்பை ஏற்றுக்கொண்டார் அந்த நேரத்தில் குடியரசுதினத்திற்கு தமிழ்ப்பகுதிகளில் பலத்த எதிர்ப்பு அரசியல் தலைவர்களும், குடியரசு தினவைபவங்களில் கலந்து கொள்ளவேண்டாம் என வேண்டுகோள் விட்டிருந்தனர் மாணவர்களையும் வைபவங்களை பகிஷ்கரிக்குமாறு வேண்டுகோள் விட்டிருந்தனர்.

முகாந்திரம் இராசையா தமது கடமையை செய்யபுறப்பட்டார் அவருக்கு வீட்டில் நிகழ்ந்ததை அவரேகூறுகிருர் இதோ படியுங்கள்

"நான் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையில் பணியாற்றி வந்தேன் அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா, குடியரசுதினத்திற்கு என்னையும் அழைத்திருந்தார். அப்பொழுது குடியரசு தினத்திற்கு வடக்கில் பலத்த எதிர்ப்பு, அரசாங்க வைபவங்களில் எவரும் கலந்துகொள்ளக்கூடாதென்று கோரிக்கை விட்டிருந்தனர்

#### யூனிபோமை காணவில்லை

நான் அந்த வைபவத்திற்கு செல்லப்புறப்பட்டேன். காலையில் யூனிபோமை பார்த்தேன் காணவில்லை. எனது பேரப்பிள்ளை அதனை எடுத்து நிலத்தில் புதைத்துவிட்டது. அரசாங்க வைபவத்திற்கு ஏன் இந்த கிழட்டு முட்டாள போகவேண்டும் என்று அதனை ஒளித்துவிட்டது. பிள்ளைகள் எந்த சூழ்நிலையில் வளருகிருர்கள் என்பதை சிந்திக்கவேண்டும். வளரும் சந்ததியினர் தான்வருங்கால யாழ்ப்பாணப் பிரஜைகள்.

#### நிரந்தர உறவுப் பாலம் வேண்டும்

எனது கடைசி மகன் ஒருசிங்கள மங்கையைமணந்துள்ளார் கெலகெதராவில் இருக்கிருர்கள். எனக்கு சிங்கள நண்பர்களும் உண்டு. குழப்பம் ஏதுமின்றி அமைதியாக வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்ட தமிழர்கள இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள வடக்கிற்கும், கிழக்கிற்கும், உங்கள் சுற்றுலா ஒருநிரந்தர பாலத்தை அமைக்கட்டும் பரஸ்பர நல்லெண்ணமும் சமாதானமும், அமைதியும், ஒற்றுமையும், மக்களிடையே வளரட்டும், இதனை மக்கள் உணர்ந்தால் நாடுமுன்னேறும்''

#### நிருபர்களிடம் கேள்விக்கணை

செயலாளர் திரு. சுந்தரம், நிருபர்களை எடுத்த எடுப்பில் கேள்விகேட்க ஆரம்பித்து நிருபர்களை திணறடித்துவிட்டார்.

இவ்வளவு நாளும் இல்லாத அக்கறை இப்ப எப்படி வந்தது? என்று அவர் நிருபர்களிடம் கேட்டார். என்னகாரணத்திற்காக வந்திருக்கிறீர்கள்? என்றும் கேட்டார் நிருபர்கள் பதிலளிக்கவில்லை.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ஆயுர்வேதம், சித்தம் யூனனி என மூன்று வகை உண்டு நான் சித்தமுறையை பின்பற்றுகிறவன்

**பத்திரிகையாளர் சுற்றுலா — 12**

பத்திரிகையாளர் வைத்திய துறை அபிவிருத்திக்கு இவ்வளவு நாட்களும் என்ன செய்திருக்கிருர்கள

நிருபர்: பத்திரிகைத் துறையைச் சேர்ந்த தனபால பெரும் தொண்டாற்றியிருக்கிருர்

சுந்தரம்: நல்லது சித்த ஆயுர்வேத வைத்தியபீடம் கைதடியில் கட்டப்பட்டது. அது இப்ப பல்கலைக் கழக மருத்துவ பீடமாக மாற்றப் பட்டுவிட்டது மூன்றுமுறை திறப்புவிழா நடை பெற்றது. ஒருதடவை பத்திரிகையாளரே புறக்கணிக்கப்பட்டனர்

[5ம் பக்கம் பார்க்க]

— கா. யோகநாதன் —

# செய்திச் சுருக்கம்

## ஐக்கியத்தை வலியுறுத்த திரைப்படப்போட்டி

(வெள்ளவத்தை)

சர்வதேச கத்தோலிக்கத் திரைப்படத் துறையின் இலங்கைக் கிளையினர் தேசிய ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் வலியுறுத்தி குறுந்திரைப்படப் போட்டி ஒன்றை நடாத்த வுள்ளனர்.

மேற்படி குறுந்திரைப்படப் போட்டியில் சிறந்த மூன்று படங்களுக்கு முறையே ரூபா 1500, 750, 500 பரிசாக வழங்கப்படவிருக்கிறது.

## காணுமல் போன வலைகள்

[மன்ஞர்]

மன்னர்-பேசாலைப் பெருங்கடல், தலைமன்னார்-இந்தியக் கோடிக்கரை ஆகிய கடல் பிராந்தியத்தில் காணுமற் போன ஏராளமான வலைகள் காரைநகர் சீ-நோர் நிறுவனத்திலுள்ள தூரக்கடல் செல்லும வள்ளங்களான "சீவேத்ஆர்ன" சுவையின் ஆகிய வள்ளங்களின் கதவுகளில் அகப்பட்டு ஏலவிற்பனையில் விற்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## பிரதிநிதி தெரிவு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபைக்கு சங்கப் பணியாளர்களின் பிரதிநிதியாக மின்தறி ஆலையில் கடமையாற்றும் திரு. க. சுப்பிரமணியம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் வர்த்தக ஊழியர் சங்கத்தின் பண்டத்தரிப்புக் கிளைத் தலைவராகவும் பணி புரிகின்றார்.

## ஏக தின லட்சார்ச்சனை

[சுன்ஞகம்]

புன்னாலைக்கட்டுவன் ஈவிலை அருள்மிகு மீனாட்சியம்பாள் திருக்கோவிலில் நடைபெற்று வரும் சாந்திக மகோற்சவத்தில் அம்பாளின் விசேஷ புண்ணிய தினமாகிய இம்மாதம் 9-ந் திகதி மீனாட்சியம்பாளுக்கு ஒரே தினத்தில் லட்சார்ச்சனை நடைபெறவுள்ளது. இவ் லட்சார்ச்சனையை முன்னிட்டு அன்று காலை 6 மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் காலை 8 மணிக்கு ஸ்ரீ சக்கிர யந்திர பூஜை, சண்டிகாஹோமம் முதலியன நடைபெற்று தொடர்ந்து லட்சார்ச்சனை நடைபெறும். மாலை விசேஷ உற்சவமும் நடைபெறும்.

லட்சார்ச்சனை விழா ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ க. குமாரசாமிக்குருக்கள், சிவஸ்ரீ ச. பிரணதார்த்திகரக் குருக்கள், சிவஸ்ரீ ந சபாரத்தினக் குருக்கள் ஆகியோரும் இன்னும் பலரும் கலந்துகொண்டு நடாத்திவைப்பார்கள். அன்று ஆலயத்தில் பொங்கல் விழாவும் தொடர்ந்து நடைபெற்று வரும்.

### சாந்திக மகோற்சவம்

10-ந் திகதி பங்குனி உத்தர தினத்தில் நடைபெறும் தீர்த்தோற்சவ திருவிழாவுடன் விழா பூர்த்தியாகும். பங்குனி உத்தர தினத்திற்கு ஸ்ரீராமபிரானினுல் தோற்றுவிக்கப்பட்ட நிலாவரை புண்ணிய தீர்த்தத்திற்கு அம்பிகை தீர்த்தமாடுவதற்கு எழுந்தருளுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளக்கம் கோருகிறுர்கள்

[பண்டத்தரிப்பு]

ப ச ற, மாவட்டத்திலுள்ள

உள்ளூராட்சிமன்றங்களின்கீழ் இயங்கி வரும் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சித்த ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு சிங்களமொழியில் இதுவரை தேர்ச்சி பெறத் தவறியமைக்காக விளக்கம் கேட்டு உள்ளூராட்சி சேவை அமைச்சு கடிதங்களை அனுப்பியுள்ளது சில மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு இதுவரை சிங்களத் தேர்ச்சி பெறுததற்காக ஏன் உங்களை பதவியிலிருந்து நீக்கக் கூடாது என்று காரணம் காட்டுமாறும் கேட்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜெர்மனியில் மரணமான இளைஞன்

(பண்டத்தரிப்பு)

கடந்த 1975-ம் ஆண்டில் புலமைப் பரிசில் பெற்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலுள்ள பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வந்த பண்ணாலையைச் சேர்ந்த வைரமுத்து மாணிக்கவாசகர் என்னும் இளைஞர் அங்குள்ள மாடிக்கட்டிடம் ஒன்றிலிருந்து விழுந்து அகால மரணமடைந்துவிட்டதாக கொழும்பிலுள்ள ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் தூதராலயம் இளைஞரின் பெற்றோருக்கு அறிவித்துள்ளது.

## பௌர்ணமி கலைவிழாவில் 'அலாவுதீன்'

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபையினரால் நடாத்தப்பட்டு வரும் பௌர்ணமி கலைவிழாத் தொடரில், இம்மாதம், 12-ந் திகதி வியாழக்கிழமை வரும் பௌர்ணமியன்று கோண்டாவில் ஸ்ரீவாகீஸ்வரி நாடக மன்றத்தினரின் 'அலாவுதீன்' நாடகம் 500-வது தடவையாக மேடையேறுகிறது (கொ நி)

## இலங்கை விஜயம்

(உடுப்பிட்டி)

புனித ஆசீர்வாதப்பர் சபைக் குருமாரின் தலைவரான அதி வண. பிதா சைமன் ரொனினி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். ஒரு மாத காலம் இங்கு தங்கி இருக்கும் இவர் உடுப்பிட்டி அம்பிற்றிய குரு மடத்தில் நடைபெறும் கருத்தரங்கில் பங்கு கொள்வதுடன் இச் சபைக்குருமார் உள்ள பங்குகளுக்கும் சென்று பார்வையிடுவார்.

## தவக்கால நற்சிந்தனை

''மண்ணிலே பாவத்தினுல் உதித்து வந்த பாவி நான், மதலையான நாள்துவக்கி வன்பிலே நடந்தநான், கண்ணுலே செய்த பாவம் எண்ணிலுமுடியுமோ, காதோடைம் பொறிவினை கணக்கினைக் கடந்ததே, புண்ணிய மனைத்துமேயதேனு மற்ற வஞ்சகப் புலையனுன பாவிநான், புரிதரண்டகங்களாம், எண்ணிறந்த கோடி பாவமும் பொறுத்திடேற்றவென் றேகனுக் குரைக்கவேணும் ஏசுநாதசுவாமியே,''

(ஜெபமாலை)

கிறிஸ்துநாதர் நமக்காகச் சிலுவையிலே உயிர் நீத்தார். அதன் காரணமாக நாம் செய்கிற பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டன என்று நாம் நினைத்தால் நம்மைவிடப் பயித்தியக்காரர்கள் வேறுயாரும் இருக்க முடியாது ''நான் படும் வேதனைகளைப் பார்த்தாவது, சிலுவையிலே ஆணிகளால் அடிக்கப்பட்டு தொங்கிக்கொண்டிருக்கும் துன்பக் காட்சியைக் கண்டாவது, இனிமேல் பாவம் செய்யாதீர்கள்'' என்று சொல்லாமல் சொல்லிவைத்தார் கிறிஸ்து.

—ஞானஒளி

தொகுப்பு: வில்பிறெப்

## வேல் ஆனந்தனின் 'வற்றுப்பளை அம்மன்'

(யாழ்ப்பாணம்)

ஆண்டுதோறும் நாடக ரசிகர்களுக்கு பலதரப்பட்ட நாட்டிய நாடகங்களை தயாரித்து அளித்துவரும் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினர் இவ்வருடத்தில் தயாரித்தளிக்கவுள்ள முதல் நாடக நிகழ்ச்சி இம் மாதம் 9ம் திகதி வற்றுப்பளை கலாமண்டப முன்றலில் மேடையேற்றப் படவுள்ளது. முல்லைமணி எழுதிய 'வற்றுப்பளை அம்மனி'ன் கதையை நாடகமாக்கி நெறியாள்கிறுர் கலைஞர் வேல் ஆனந்தன். திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) எழுதியுள்ள பாடல்களுக்கு திரு எம் ஜேசுதாஸ் இசை அமைத்துள்ளார். இந்நாட்டிய நாடகத்தில் கலைக்கோவில் பத்மினி நடராஜா, மாலா நவரட்ணம், குசலகுமாரி சின்னராசா, கமலா பரராசசிங்கம், சந்திரவதனி சிவசுப்பிரமணியம், வித்தியாதேவி சரவணமுத்து, தேவமனேகரி இரத்தினசிங்கம், பவானி முத்துக்கிருஷ்ணன் ஆகியோருடன் பிரபல நடிகர் திரு. எஸ். லோகநாதனும் நடிகபங்கேற்றுள்ளார். (கு)


# உங்கள் தாயார் தினமும் உங்களுக்கு புறேற்றினெக்ஸ்® தருவது ஏனென்று தெரியுமா?

### ஆம் அது சொக்லேட் சுவைகொண்டதாம்

ம்..., ம்... அதுவும் சரிதான், ஆனல், புறேற்றினெக்ஸ் 56% புரதச் சத்து கொண்ட ஆரோக்கியமான பானம் என்பதாற்தான் தாயார் அதனை வாங்குகிறுர் என்பது எனது எண்ணம்.

### புரதச் சத்து? அதுஎன்ன செய்கிறது?

உங்களது போன்ற இளம் உடம்புகளுக்கு, தசை நார், எலும்பு, மூளை விருத்திக்கு புரதச்சத்து தேவை புறேற்றினெக்ஸிலுள்ள புரதம் புத்தி கூர்மையை உண்டாக்கிறது. நோய்கள் வராமல் பாதுகாக்கிறது.

### என்ன? புறேற்றினெக்ஸ் இத்தனையும் செய்கிறதா?

உண்மையாகவேதான்.

அதுமட்டுமல்ல, புறேற்றினெக்ஸ் மற்றெந்ததையும் விட எடைக்கு எடை மிக உயர்ந்த புரதச் செறிவுள்ளது. அத்துடன் விற்றமின்களும் கனிப் பொருட்களும் நிறைந்தது.




புறேற்றினெக்ஸ் தெரிந்தெடுக்க அம்மா உண்மையாகவே கெட்டிக்காரிதான்

அப்படியே மீண்டும் மீண்டும் கூறிக்கொள்ளலாம்.

கைக்கடக்கமான 50 கிறும் பக்கெற்றுகளிலும் மலிவான 125 கிறும் பக்கெற்றுகளிலும்



## புறேற்றினெக்ஸ் சாதாரண மோல்ற் பானத்திலும் உன்னதமானது

Grant K & E 924

வெஸ்லி
(காங்கேயசூ)
தினசரி 6-30, 9-30
சனி. ஞாயிறு 2-30
முத்துராமன்-சுஜாதா
பேரும் புகழும்

RIO (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Sands of the DESERT

REGAL (Jaffna) Daily 4-30, 7-00 & 9-30 p.m. only
THREE YELLOW CATS
(Cinemascope - Color)
Karate Action Thriller

ராஜா (யாழ்நகர்)
சில தினங்கள் மட்டும்
தினசரி 10-30, 2-15, 6-15 & 9-45
ஜெமினி - சாவித்திரி
நடித்த
கற்புக்கரசி
புத்தம்புதிய பிரதி

ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 6-15&9-45
ஜெய்சங்கர் - விஜயநிர்மலா
உயிரா மானமா
(புத்தம்புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 2-30, 6-30&9-45
சனி, ஞாயிறு: 10-30, 2-30
6-30 & 9-45
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
சாரதா
(புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்)
போன்: 7688 தினசரி 4 காட்சிகள்
பாலநாகம்மா

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி
டி. ஆர். மகாலிங்கம்
ஸ்ரீ வள்ளி
(புதிய பிரதி—கலர்)
குறிப்பு: யாழ். நகரில் இதுவே கடைசித் தடவையாக திரையிடப்படுவதால் ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்துங்கள்.

மனோகரா (யாழ்நகர்)
இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர்.-பத்மினி
காட்டுரோஜா (புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
15 வது வாரம்
போன்: 466
தினசரி 4 காட்சிகள்
10-30, 1-30, 4-15, & 7-00
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி யாழ்நகர்
போன்: 7642 கடைசித்தினம் 8-4-79
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
விநோத் கன்னா, கபீர்பேடி, மௌசமிசட்டர்ஜி
"கச்சே டாக்" —ஹிந்தி— ஈஸ்ட்மன் கலர்
9 முதல்...
ராஜேந்திரகுமார் (இருவேடங்கள்)
ஹேமமாலினி, பானுரேகா
"கோரா அவுர் காலா" ஹிந்தி - கலர்
GORA AUR KALA Hindi - Color

# எனது யூனிபோமை...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

## 'புலி'க்கு அஞ்சி

ஆயுர்வேத ஆஸ்பத்திரி திறப்பு விழா ஏற்பாடு நடைபெற்றது. அமைச்சர் வருவதாக உறுதியளித்து 'புலி'களுக்கு அஞ்சி வரவில்லை.

"பிரதி அமைச்சர் வருவதாக இருந்தது. பின்னர் அவரும் வரவில்லை கடைசியில் ஆணையாளரே திறந்துவைத்தார்.

"இலங்கையில் முதன் முதலாக சித்த ஆயுர்வேத வைத்தியப் பயிற்சியை முறையாகப் படிப்பிப்பதற்கு ஒரு வைத்தியசாலையை நிறுவியவர் அமரர் கலாநிதி ஜே. பஸ்தியாம்பிள்ளையே. கடந்த 50 வருடங்களாக இக்கல்லூரியில் பயின்று வெளியேறிய ஏறக்குறைய முன்நூறு சித்தவைத்திய பட்டதாரி மருத்துவர்கள் நாட்டின் பல பாகங்களிலும் தொழிலாற்றிவருகின்றனர்.

1975ம் ஆண்டின்பின், லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி நிர்வாகத்தினரிடையேயும், ஆசிரியர்கள், மாணவர்களிடையேயும் ஒற்றுமையின்மை ஏற்பட்டு கல்லூரியின் நிர்வாக ஓட்டம் தடைப்பட்டது. இக்கல்லூரியில் வெளிமாகாணங்களிலிருந்தும் மாணவர் வந்து படிக்கின்றனர்.

## பாகுபாடு காட்டப்படுகிறது

டாக்டர் ஏ. நடராசா கூறியதாவது: சித்தமருத்துவர்களுக்கு பாகுபாடு காட்டப்படுகிறது. கைதடி சித்தஆயுர்வேத வைத்தியசாலைக்கு, சித்த பட்டதாரியாக வைத்திய அத்தியட்சகர் நியமிக்கப்படவில்லை. ஆயுர்வேத வைத்தியர் ஒருவரை வைத்திய அத்தியட்சகராக நியமித்தனர். அமைச்சரிடம் புகார் செய்யப்பட்டதை தொடர்ந்து சித்தவைத்திய பட்டதாரி ஒருவர் வைத்திய அத்தியட்சகராக நியமிக்கப்பட்டார். மீண்டும் ஆயுர்வேத பட்டதாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் ஏன் இந்த பாகுபாடு.

தெற்கில் ஆயுர்வேத கல்லூரிக்கு, சித்த பட்டதாரி ஒருவரை நியமிக்கமுடியுமா?

## சித்தமருத்துவர் இல்லை

மருந்துதொடர்பான சபையில், சித்தமருத்துவர் இல்லை. அதனால் சித்தமருந்துகள் குறைவு. ஆயுர்வேத மருந்து அதிகம். இதனை சுட்டிக்காட்ட சபையில் சித்த மருத்துவர் இல்லை. ஆயுர்வேத மருந்து தயாரிக்க லட்சக்கணக்கில் செலவாகிறது.

சொந்தமாக சித்த மருந்து தயாரிப்பது கஷ்டம் முன்பு நாம் இந்தியாவிலிருந்து மருந்துகளை இறக்குமதி செய்தோம். இப்போசெய்வதில்லை. குங்குமப்பூ சித்த மருந்துக்கு தேவை. அது யாழ்ப்பாணத்தில் கிடைப்பதில்லை.

நிருபர்: ஏன் மருந்துகளை இறக்குமதி செய்வதில்லை

பதில்: அரசின் அனுமதி வேண்டும்.

நிருபர்: சித்த மருந்தில் ஏற்புத் தடுப்புக்கு என்ன பாவிப்பது.

பதில்: மரமஞ்சல்தான். ஆங்கில டாக்டர்களே தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்புதடுப்பு ஊசி ஏற்ருமல் மரமஞ்சல் கொடுக்கிருர்கள். ஏற்புதடுப்பு ஊசி சிலருக்கு ஒத்துவராது வேறு வருத்தங்கள் ஏற்படும்

செல்வி ஹெக்கத்: ஹோமியோபதி பற்றி என்ன கூறுகிருர்கள்?

பதில்: அது புறம்பான வைத்தியம் அதுபற்றி எதுவும் தெரியாது அது எங்களை சித்தமுறைக்கு கிட்டிய முறையாகும்.

## பிரிவினைதான் ஒரேவழி

முகாந்திரம் இராசையா இறுதியில் கூறியதாவது: சிங்கள மக்களுடன் யாழ்ப்பாண மக்கள் ஒற்றுமையாக வாழ விரும்புகின்ருேம். பரஸ்பரம் நல்லெண்ணத்துடன் சிங்கள மக்களுடன் வாழமுடியும் என்ற நம்பிக்கை இன்னும் இருக்கிறது. அதுமுடியாவிட்டால் பிரிவினைதான் ஒரேவழி

இங்கிலாந்து, ஸ்கொட்லந்து பிரச்சினை தீர்க்கப்பட்டதுபோல் ஏன் செய்யக்கூடாது. அதிகாரங்களை பரவலாக்கி, சுயாட்சி முறையை ஏன் இலங்கை அரசு சிந்திக்கக்கூடாது.

## ஒற்றுமையை விரும்புகிருர்கள்

பாகுபாடுகளை நீக்கி எங்களை சகோதரர்கள்போல் நடத்துமாறு கேட்கிருேம். யாழ்ப்பாண மக்கள் ஒற்றுமையையே இன்னும் விரும்பிக்கொண்டிருக்கிருர்கள்.

கத்திவி...' பார்க்க பேறு சக்திவா... து. ஆதலால் ஒற்றுமைக்காக உங்கள் பணியை செய்யுங்கள்.

நேரம் 5 மணியாகிவிட்டது பத்திரிகையாளர் புறப்பட்டனர்.

## அப்படி என்ன ரகசியம்

பத்திரிகையாளர் கலந்துரையாடல் நடந்துகொண்டிருந்த போது கொழும்பிலிருந்து வந்த பத்திரிகையாளர் ஒருவர் முகாந்திரம் இராசையாவை தனிமையில் அறைக்குள் கூட்டிச் சென்று இரகசியமாக ஏதோ பேசிக்கொண்டிருந்தார். அப்படி என்ன இரகசியம்? அதனை அறியவேண்டும் என விரும்பினேன். (வளரும்)

# அருளாளன்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பழம், சூடம் ஊதுபத்தி முதலிய பொருள்களோடு ஒரு பட்டுப் பையும் இருந்தது. சுவாமிகள் பட்டுப் பையை எடுத்து அதன் முடிச்சை அவிழ்த்தார்கள். கலீர் என்ற ஒலியோடு 100 தங்கப்பவுண்கள் பரதேசியாருக்கு முன்னே விழுந்தன.

யாவரும் வியப்பு எய்தினர் அற்புதம்! அற்புதம்! என்றனர்.

'இடரினும் தளரினும்' பாடி சம்பந்தர் பொற்கிழி பெற்ருர். "இடரினும் தளரினும் பாடிய பரதேசியாருக்கும் பொற்கிழி கிடைத்தது' என்று ஆனந்தம் பொங்கச் சிரித்தார்கள்.

முடிவிலே, அந்தப்பவுண்களில் ஒன்றை எடுத்துப் பரதேசியாரை அங்கு கொண்டு வந்த மோட்டார் வண்டியின் சாரதிக்குச் சுவாமிகள் கொடுத்தார்கள். மிகுதியான 99 பவுண்களையும் பரதேசியாரின் கையில் வைத்துப் பின்வருமாறு அன்புக் கட்டளையிட்டார்.

'நீர் இத்தனை காலமும் பாடும் பணியில் ஈடுபட்டு, உம்முடைய உடல் இளைத்துப்போய் விட்டது. உம்முடைய பாடும் பணிக்குப் பரிசும் இதோ ஆண்டவன் அனுப்பி வைத்திருக்கிஞன். ஆகவே, இனிநீர் ஆறுதலாக இருக்க வேண்டும். உசன் ஆச்சிரமத்தில் தங்கிக்கொள்ளும்.

இந்தக் கட்டளையைச் சிரமேல் தாங்கியவராய், உசன் ஆச்சிரமத்திற்கே சென்று பரதேசியார் தமது கடைசி நாட்களை நிவத்தியான மயமாக்கி நிறைவு எய்தினர் என்பது வரலாறு. சுவாமிகளுடைய வரலாற்றில் இந்த நிகழ்ச்சி மிகவும் உச்சமான பெருமையுடையது.

யோகசுவாமி திருவடிவாழ்க.

இன்று யோகசுவாமிகளின் குருபூசையாகும்.

[நன்றி- 'சிவதொண்டன்'

நாகம்ஸ்
[கன்னாகம்]
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - தேவிகா
அன்னை இல்லம்

# உலக அரங்கில்...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

யோசிக்கிறது.

## கட்டுப்பாட்டுடன் இயங்கவேண்டும்

நாம் இன்று விடுதலைப் போரை நடத்திக்கொண்டிருக்கிருேம். இந்நிலையில் நாம் அறிவை இழக்காமல் கட்டுப்பாட்டுடன் இயங்கவேண்டும் அப்போதுதான் எமது லட்சியத்தில் விடிவுகாணமுடியும் என்ருர்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில், அடுத்த வாரம் எமது தலைவருக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பொது வரவேற்பொன்றை அளிக்கவுள்ளோம் திருவாளர் அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் அவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் கொண்டு வரப்பட்டும் தனது வாதத்திறமையாலும் நீதியின்மபராலும் உண்மையை எடுத்து விளக்கி எமது மக்களது தனித்துவத்தை மேம்படுத்தியுள்ளார் என்ருர்.

விழாவில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் உரையாற்றிஞர். (செ)

# காணி அறுதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் தெரியவந்துள்ளது.

1971ம் ஆண்டு தம்பாபிள்ளை இராசையா என்பவர் தமது மகள் பாரிசபுஸ்பம் என்பவருக்கு நன்கொடை வழங்கியதாகவும், 1978ம் ஆண்டு பாரிசபுஸ்பம் அக்காணியை விற்க முற்பட்டபோது அக்காணி ஏற்கனவே டாக்டர் அம்பலவாணருக்கு அறுதி முடிக்கப்பட்டிருந்தது தெரியவந்ததாம்.

உடனே புஸ்பம், இதுவிஷயத்தை தந்தையா தம்பாபிள்ளை இராசையாவின் கவனத்திற்கு கொண்டுவர அவர், இதுபற்றி யாழ். விசேட புலன் குற்றவிசாரணை பகுதி பொலிஸில் புகார் செய்தார்.

சந்தேகநபரான டாக்டர் எஸ் ஏ. அம்பலவாணர் புதுக்குடியிருப்பு இரணைப்பாலையிலும் இராசையா என்பவரை திருநெல்வேலியில வைத்தும் யாழ். விசேட குற்றத்தடுப்பும் புலன்விசாரணைப் பகுதிப் பொலிசார் கைதுசெய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது, நீதிபதி சந்தேகநபர்களை பிணையில்செல்ல அனுமதித்து இம்மாதம் 30ம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். [கொ. நிரு.]

# ஆறு இளைஞர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

உறுப்பினர்களான ராசராஜ், இராமச்சந்திரன், யோகபதி பாலச்சந்திரன், பெடிக்ஆகியோர் பொலிசாரரால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு மாவட்ட பதில் நீதவான் திரு. எஸ். நவரட்ணராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இவர்களைப் பிணையில்விடுமாறு சட்டத்தரணிகளான மங்களா கந்தையா, ரெஜினோல்ட் கோயில்பரம்பில், என். ஆர். சின்னையா ஆகியோர் ஆஜராகி வாதாடிஞர்கள். இப்பிணை மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி, மேற்படி சந்தேகநபர்களான இளைஞர்களை சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார்.

## "கல்வித் திட்டங்கள் மாறும்போது

# மாணவரின் கல்விப் பாரம்பரியங்கள் மாறக்கூடாது"

### பரிசளிப்பு விழாவில் கைலாசபதி

(மாவிட்டபுரம்)

"அரசாங்கங்கள் மாறும்போது கல்வித்திட்டமும் மாறலாம். ஆனால் மாணவர்களது கல்விப்பாரம்பரியங்கள் மாறக்கூடாது அவை நிலைத்துநிற்க வேண்டியன" என்று அளவெட்டி அருணோதயக்கல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழாவின் பிரதம விருந்தினராகக்கலந்து பேசியபேராசிரியர் க. கைலாசபதி கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் கல்லூரி திறந்தவெளியில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நாட்டின் கல்வித்தளங்கள் அரசினால் சுவீகரிக்கப்பட்டு அரசின் சொத்தாக்கப்பட்டதன் பின்னர் தனியாரின் பணி அருகிவந்துள்ளது. ஆனால் இன்றைய நிலையில் கல்விக்கூடங்களை வளர்த்தெடுப்பதில் தனியாரும் பங்கெடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு மாணவன் முழுமையானவனாக மாறவேண்டுமானால் அவனுக்கு பாடசாலைக்கல்வி, வீட்டுக்கல்வி, சமூகக்கல்வி ஆகிய மூன்று கல்வித்துறைகளிலும் ஈடுபாடுவேண்டும். பாடசாலைக்கல்வியுடன் ஏனைய இருகல்விகளையும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு ஊட்டவேண்டும்."

19ம் நூற்றாண்டு தொடக்கம் சமூக நிலையை ஆராய்ந்து ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதவிருக்கிறேன். அதற்கு பாடசாலைகளை நிறுவி சேவையாற்றியவர்களது விபரங்களும் தேவை. அவற்றை தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

சட்டத்தரணி திரு. ரி. இளையதம்பி நிறுவுனர் நினைவு நாள் சொற்பொழிவாற்றுகையில், இக்கல்லூரியை நிறுவிய அருணாசலஉடையார், ஆறுமுகநாவலர் தொண்டைத் தொடர்ந்து ஆற்றியவர். கிறிஸ்தவர்களாலேயே பாடசாலைகள் அமைக்கப்பட்டு கிறிஸ்தவர்களே ஆசிரியர்களாக இருந்து சேவைபுரிந்த அக்காலத்தில் சைவசமய விருத்திக்காக இப்பாடசாலையை அமைத்து சேவை புரிந்த அன்னாரை நாம்நினைவு கூருவது மிகவும் அவசியமாகும். அவரது அரிச்சுவடி போன்று விளங்கும் இன்றைய அதிபர் கல்லூரி வளர்ச்சியில் காட்டும் அக்கறை பெரிதும் பாராட்டத்தக்கது என்றார்.

அதிபர் திரு. சிவசுப்பிரமணியம் பேசுகையில், பாடசாலையை அதிபர்கள் ஆசிரியர்களால் மட்டும் கட்டி வளர்க்கமுடியாதெனவும்பெற்றோர் ஊர்மக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு அவசியமெனவும் இக்கல்லூரியைப் பொறுத்தவரை அந்த ஒத்துழைப்பு அதிகமாக இருப்பதால்தான் சிறப்பாக கல்லூரியை நிர்வகிக்கவும் வளர்க்கவும் முடிகிறதெனவும் மலேசியா சின்னப்பு பரிசுத்திட்டம் இதற்கு ஒரு முன்னேற்பாடான உதவியெனவும் குறிப்பிட்டார்.

## பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில்

# தரத்திற்குப்பதில் புள்ளிகளை வெளியிடுக

### பாராளுமன்றத்தில் சிவா கோரிக்கை

[கொழும்பு]

பல்கலைகழகங்களில் அனுமதிக்கப்படாதவர்களில் 80 வீத மாணவர் பல்கலைக்கழக அனுமதிக்குத்தகுதிஉடையவர்களாக இருக்கின்றனர் எனவே பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சை [ஜீ. சி. ஈ] உயர்தரம்] பெறுபேறுகளில் 'ஏ', 'பி', 'சி' என்றதரத்திற்குப் பதிலாக மாணவர்கள் பெற்ற புள்ளிகளை வழங்குங்கள் இவ்வாறு நல்லூர எம் பி திரு. எம், சிவசிதம்பரம் நேற்று முன்தினம் பாராளுமன்ற ஒத்திவைப்பு பிரேரணையின் போது கோரிக்கைவிடுத்தார்.

இதற்குப் பதில் அளித்த விஞ்ஞானக் கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்யூ பேசுகையில் கூறியதாவது:-

இது குறித்து நான் இச்சபையில் ஏற்கனவே பல தடவை விளக்கம் அளித்துள்ளேன். புள்ளிகளை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு மாணவனின் திறமையை மதிப்பிட முடியாது புள்ளிகள் பலவிதமாகப் பெறப்படுகின்றன

இக்கட்டத்தில் திரு சிவசிதம்பரத்துக்கும் திரு. சிறில் மத்யூவுக்குமிடையில் பலத்த வாக்குவாதம் இடம்பெற்றது.

இவ்விவகாரம் குறித்து ஆராய ஒரு கமிஷனை நியமியுங்கள் அல்லது தெரிவுக் கமிட்டியை நியமியுங்கள் என்றும் சிவசிதம்பரம் கோரிக்கை விடுத்தார்.

### யோகேஸ் சவால்

யாழ்ப்பாணம் எம். திரு. வி யோகேஸ்வரன் பேசுகையில் கூறியாவது:-

பல்கலைக்கழக அனுமதி குறித்தும் புள்ளிகள் குறித்தும் நினைத்தபடி கூறுகிறீர்களே, பேச்சை விடுத்து இவ்விவகாரம் குறித்து ஆராய ஆணைக்குழு ஒன்றை அல்லது பாராளுமன்ற தெரிவுக் கமிட்டி ஒன்றை நியமியுங்கள் பார்க்கலாம். இதை நான் உங்களுக்கு ஒரு சவாலாக விடுகிறேன்.

எனது தொகுதியில் வசதி உள்ள பாடசாலைகளும் இருக்கின்றன வசதிகள் அற்ற சிறிய பாடசாலைகளும் இருக்கின்றன இதேவேளையில் களனியில் வசதியான பாடசாலைகளும் இருக்கின்றன. பின்தங்கிய மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள களனி தொகுதியில் உள்ள பெரிய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்கும் அதே வேளையில் வசதியுள்ள மாவட்டமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள எனது தொகுயிலுள்ள சிறிய பாடசாலை மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காது இதுதானு உங்கள் திட்டம் [ம-இ]

## உலக அரங்கில் எமது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சியக்குரல் ஒலிக்கத்தொடங்கி விட்டது,

இவ்வாறு இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ அமிர்தலிங்கம் தன்னை எதிர்கொண்டழைக்க குழுமியிருந்த கட்சித்தொண்டர்கள் மத்தியில் நன்றிதெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் தலைமை வகித்தார். மண்டபத்தில் திரு அமிர்தலிங்கத்தை நூற்றுக்கணக்கான அன்பர்கள் நீண்ட ஆயுளை வாரி வழங்கு இறைவா என வாழ்த்தி மாலை அணிவித்தனர்.

திரு அமிர்தலிங்கம் உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது;

நான் சென்றவிடமெல்லாம் வரலாறு காணாத உணர்ச்சிப் பெருவெள்ள வரவேற்புக் கிடைத்தது. சகல கட்சிப் பிரமுகர்களும், எவ்வித பாகுபாடும் காட்டாது இலங்கைத் தமிழ்மக்கள் நடத்தும், இனவிடுதலைப்போரை அறிவதற்கும், தங்களது தார்மீக ஆதரவை செலுத்துவதற்கும், திரண்டு வந்திருந்தனர். சகல சர்வ கலாசாலைகளிலும், எனக்கும், எனது மனைவிக்கும், உடன் பிறந்த பாசஉணர்வைப்போல வரவேற்பளித்து, எமது நிலையை நன்கு தெரிந்து கொண்டார்கள்.

எனக்கும் எனது மனைவிக்கும் தமிழகத்தில் அன்புத் தொல்லையைத் தவிர வேறு எந்தத் தொல்லையும் ஏற்படவில்லை ஒருபுறம் அ. இ. அ தி மு க. வினரும், மறுபுறம் தி மு க. வினரும் எம்மை வரவேற்க போட்டி போட்டுக்கொண்டு எம்மை அழைத்தனர் நாம் எந்தநேரத்தில், எங்கு பேசுவது என்பது பற்றி தடுமாற்றம் ஏற்பட்டது. தமிழக அரசின் முதல்வர் எம்மை அன்போடு வரவேற்றார், டெல்லிக்கு செல்வதற்கு முன்னர், தமது அமைச்சர் ராஜாராமையும். திரு. ஜனார்த்தனத்தையும் அனுப்பி எமக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தனர். அதைப்போல, எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி, ஜனதா கட்சியினர், கம்யூனிஸ்ட் கட்சியினரும் தேவையான வசதிகளைச் செய்தனர்.

நான் அங்குபேசிய இறுதிக் கூட்டங்களில், எனக்கு இலங்கை சென்றவுடன் பெரும் புயலொன்றை சமாளிக்க வேண்டியேற்படுமென்று கூறினேன். நான் இங்கு வந்ததும் முதல்கூடிய பாராளுமன்றத்திலேயே பிரச்னை எழுப்பப் பட்டது. பாராளுமன்றத்திலே கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில்மத்யு கிளப்பிய வகுப்புவாதத்தையே நீதியின் பெயரால், நீதியை நிலைநாட்டி அமைச்சரையே வாயடைத்து விட்டேன், இதை வகுப்புவாதத்தையே கக்கும் ஆங்கில பத்திரிகையொன்று வெளியிட்டுவிட்டது.

நான் கடைசியாக இந்து பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்து ஒன்றரை மணித்தியாலம் எமது நிலையை விளக்கினேன் தவறானமுறையில் எமது செய்தியை வெளியிட்ட இந்து பத்திரிகை, பின்னர் இலங்கையில்வாழும் பதிவுப் பிரஜைகளிடம் பாகுபாடு காட்டப்படுகிறது; போன்ற எமக்கு சாதகமான செய்தி வந்த பத்திர்கை இங்கு விநியோகிக்கப்படவில்லை. அரசு தமக்கு பாதகமான செய்தி வரும் பத்திரிகைகைகளை மட்டுமே உடன் இங்கு விநியோகிக்கின்றது மற்றவைகளை தடுத்துநிறுத்தி பின்னர் விநி

[5ம் பக்கம் பார்க்க]

## மதகு திருத்தப்படுகிறது

# இந்த வீதிகளில் போக்குவரத்து இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் —கண்டிவீதியில், கச்சேரியிலிருந்து கைதடி வரை மதகு திருத்துவதற்காக வீதிப் போக்குவரத்து நேற்று நண்பகல்முதல் தடை செய்யப்பட்டுள்ளதென யாழ். பெருந்தெருக்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

வாகனங்கள் கச்சேரிச் சந்தியிலிருந்து கச்சேரி நல்லூர் வீதி, யாழ். பருத்தித்துறை வீதி வழியாக கோப்பாய்ச் சந்தியை அடைந்து அங்கிருந்து கைதடிச்சந்திக்கு செல்ல ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்நோக்கி வரும் வாகனங்களும் கைதடி சந்தியிலிருந்து கோப்பாய்ச் சந்தி சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் வரும்.

இத்திருத்த வேலைகள் முடிவடைய இலதினங்களாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்க்காங்கிரஸ் வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுக்காலை எடுக்கப்பட்டபோது 3ம் எதிர் மனுதார் சார்பில் எழுத்து மூலமான சமர்ப்பணம் நீதிபதியிடம் வழங்கப்பட்டது. நீதிபதி மேமாதம் 14ம் தேதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

## இன்றைய திருவிழா

வண்ணை- ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவில் மகோற்சவம் 16ம் நாளாகிய சப்பரத் திருவிழா பகல் 9-00 மணிக்கு பஞ்சமூர்த்திகள் பூஜையாகி உள்வீதிவரும். மாலை 6-30 மணிக்கு பூஜையாகி விநாயகப்பெருமானும் முருகப்பெருமானும் இடபவாகனங்களிலும் சிவன் அம்மன் இடபாரூடராக பெரிய சப்பரத்திலும் வெளிவீதி வந்தும் காட்சி கொடுத்து அருளுவார்கள்.

## அமிர்தலிங்கத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முன்னாள் யாழ்.மேயர் திரு. சி. நாகராசா, சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன், முன்னாள் உதவிமேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம், முன்னாள் உதவி மேயர் திரு என். ரி செல்லத்துரை, திரு. க. முருகரத்தினம், ஆசிரியர் ஹமீத், ஜனாப் ஆலிம் பிச்சை, சட்டத்தரணி இமாம், திரு. இராஜேந்திரம், திரு. சுந்தரலிங்கம் திரு அலோசியஸ் மற்றும் பலர் திரு.அமிர்தலிங்கத்திற்கு மாலை சூட்டி வரவேற்றார்கள்.

தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு சத்தியார் கோஷ்டியினரும் வரவேற்றனர்.

கோப்பாய் எம். பி திரு. கதிரவேலுப்பிள்ளை, வண்ணை ஆனந்தன், ஆகியோரும் வரவேற்றனர்.

மேடையிலிருந்து திரு அமிர்தலிங்கம் ரயில்நிலைய வெளிப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அதன்பின் பண்டிதர் கா. பொ இரத்தினமும். திரு, அமிர்தலிங்கமும் ஜீப்பில் கூட்டணிக்காரியாலயத்திற்கு சென்றனர். அங்கும் திரு. அமிர்தலிங்கத்திற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. [கொ நிரு]

**New Linga Tutorial College**

K. K. S. Road, CHUNNAKAM.

G.C.E. A/L 1980 APRIL, NEW A/L 1980 AUGUST

வகுப்பிற்கு

தூய கணிதம்
பிரயோக கணிதம் Mr. A. பத்மநாதன்

ஆரம்பம் : 9-04-1979 காலை 10 மணி

DIRECTOR :- S. JEYEM

2085

யாழ். மனோகராவில்...

மகத்தான புத்தாண்டு–ஈஸ்டர் வெளியீடு

13 04-79 முதல் குதூகல ஆரம்பம்

மக்கள் கலைஞர் ஜெய், புன்னகைஅரசி -விஜயா, தேங்காய் சீனிவாசன், எஸ். வி. சுப்பையா நடித்த

**அன்பின் அலைகள்**

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை பொன்னம்மா

உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சீ பீ செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தெய்வேந்திரன், டாக்டர் செ. மகேந்திரன் ஆகியோரது அன்புத்தாயாருமான பொன்னம்மா அவர்கள் காலமாகியுள்ளார்கள் அன்னாரது இறுதிக் கிரியைகள் 7-4-79 சனிக்கிழமை [இன்று[ பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று தகனத்திற்கு பீப்பிலிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். ''மிதிலா'' முதலாம் கட்டை, உடுவில். 2097

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 889,